முச்சந்தி முரளி




"இனி மார்ச் மட்டும் இதைச் சொல்லி உலகத்தைப் பேய்க்காட்டப்போறார் பாருங்கோ"


Registered as a Newspaper

பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 32

வியாழக்கிழமை
28 டிசெம்பர் 2023

மார்கழி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054


# இனப்பிரச்சினை தீர்வு: மார்ச் மாதம் அறிக்கை



## இணைந்து செயற்பட கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கும் ஜனாதிபதி ரணில்

**கொழும்பு, டிசெம்பர் 28**
**நாட்டில் ஸ்திரமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும், தற்போது நாடு நிறைவேற்ற வேண்டிய இரண்டு பிரதான பொறுப்புகளாகும். இந்த இரு இலக்குகளை அடைவதில் என்னுடன் இணைய வேண்டும் என்று அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன்.**

11

## நேற்று மட்டும் 71 பேருக்கு டெங்கு!

யாழ். டிசெ.28
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை மட்டும் 71 பேர் டெங்குத்

11

புலிச்சின்ன ரீ சேர்ட்:

## இளைஞனுக்கு பிணை

யாழ்ப்பாணம், டிசெ.28
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்வே.பிரபாகரன் மற்றும் அந்த அமைப்பின் சின்னம்

11

## கிணற்றில் தவறிவீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

கிளிநொச்சி, டிசெ.28
கிணற்றில் தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி, பிரமந்தனாறில் உள்ள மயில் வாகனபுரத்தில் நடந்துள்ளது.
ஆறுமுகம் தங்கவேலு (வயது-57) என்பவரே உயிரிழந்துள்ளார்.
சம்பவத்தினத்தன்று உறவினர் வீடொன்றுக்கு நிகழ்வுக்குச் சென்று வந்த அவர், கிணற்றில் குளித்தபோது தவறி, கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளார்

11

## தேவாரம் ஓதிய முதியவர் மயங்கிச் சாவு!

வடமராட்சி, டிசெ.28
பிள்ளையார் ஆலயத்தில் தேவாரம் ஓதிக் கொண்டிருந்த முதியவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

11

# யாழ். நகரப்பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.28
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று மாலை பொலிஸாரால் விசேட தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
நாடு முழுவதும் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பணிப்பின்பேரில் போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிரான சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
அதன் ஒரு கட்டமாக யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று மாலை திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்தவின் வழிகாட்டலில், பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் நெறிப்படுத்தலில் இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் மற்றும் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் என்பவற்றில் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
இந்தத்தேடுதலின்போது, சந்தேகத்துக்கிடமாக நடமாடிய சிலர் பொலிஸாரால் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு

11



## அதிகஷ்டப் பகுதியில் அதிபர் நியமனங்கள்!

### புதிதாகப் பொறுப்பேற்ற அதிபர்கள் ம.உ.ஆ.குழுவில் நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 28
புதிதாகப் பொறுப்பேற்ற அதிபர்கள், தாம் அதிகஷ்டப் பகுதிகளுக்கு நியமிக்கப்பட்டமையை எதிர்த்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு வழங்கியுள்ளனர்.
மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்றையதினம் இந்த

11

## யாழில் தொடர்கின்றன டெங்கு உயிரிழப்புகள்

### நேற்றும் இளைஞன் சாவு!

யாழ்ப்பாணம், டிசெ.28
டெங்குத் தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணத்தில் 23 வயது இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.
அச்சுவேலி, தோப்பைச் சேர்ந்த ரவிச்சந்தரன் சாரூரன் (வயது-23) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.
டெங்குத் தொற்றுக்குள்ளாகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த இவர், சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.
கடந்த ஒரு வாரத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்குத் தொற்றால் ஏற்பட்ட மூன்றாவது உயிரிழப்பு இதுவாகும்.
டெங்குக் காய்ச்சல் காரணமாக கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவி ஒருவரும், கடந்த திங்கட்கிழமை 11 மாத

11

# பேராசையால் பறிபோன 26 இலட்சம் ரூபா!

யாழ்ப்பாணம், டிசெ.28
சமூக வலைத்தளங்களின் மூலம் யாழ்ப்பாணத்தில் சுமார் 26 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது.
இது தொடர்பாக இரு முறைப்பாடுகள் பாதிக்கப்பட்டவர்களால் நேற்று பதிவு செய்யப்பட்டுள்ளன.
இணையம் மூலம் முதலீடு செய்து பணம் ஈட்டலாம் என்று ஆசையூட்டப்பட்டே இந்த மோசடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
சமூக வலைத்தளங்கள் மூலமே இந்தத் தொடர்புகள் ஏற்பட்டுள்ளன.

11

## தீக்காயம்: முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், டிசெ.28
நுளம்புக்கு புகையிட்ட முதியவர் ஒருவர் தீக்காயங்களுக்கு உள்ளாகி

11

## முற்றத்தில் விளையாடிய சிறுமியின் சங்கிலி 'அபேஸ்'

மன்னார், டிசெ.28
வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி அணிந்திருந்த தங்கச்சங்கிலி கொள்ளையிடப்பட்டுள்ளது.

11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றங்களால் கச்சான் விளைச்சல் பாதிப்பு



## யாமினி சசீலன் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, டிசெ. 28**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்முறை நிலவும் காலநிலை மாற்றத்தின் விளைவாக கச்சான் பயிர்ச்செய்கை விளைச்சலில் பாதிப்பு ஏற்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் யாமினி சசீலன் தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது-

இப்போதைய காலநிலையால் ஏற்பட்ட அதிகூடிய மழைவீழ்ச்சியால் அதிகளவில் நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் கச்சான் சப்பியாதல், நிறை குறைதல் என்பன ஏற்படும். இவற்றின் காரணமாக வழமையான விளைச்சாலைவிட இம்முறை 25 சதவீதம் குறைவாகவே அறுவடை இருக்கும்.

இவ்வருடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 1950 ஏக்கர் நிலப்பரப்பில் 1200 விவசாயிகள் கச்சான் பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். கடந்த வருடம் கச்சான் விளைச்சலில் முல்லைத்தீவு மாவட்டம் எதுவித தாக்கமும் அற்று இருந்தது.

விவசாயிகள் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்கின்ற பயிர்ச் செய்கை தொடர்பில் மிக அவதானமாகச் செயற்படவேண்டும்.-என்றார். (ரி-125)

# தேர்தல் நடத்தாவிடின் வீதிக்கு இறங்குவோம்

## மேர்வின் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 28

தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஆட்சியாளர்கள் முற்பட்டால் கோத்தாபய ராஜபக்சவுக்கு நடந்தகதியே ஆட்சியாளர்களுக்கும் நடக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என நம்புகின்றோம். அவ்வாறு இல்லாவிட்டால் 10 லட்சம் பேரை கொழும்பில் களமிறங்குமாறு இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளேன்.

தேர்தலை நடத்தாமல் இருக்கும் ஏகாதிபத்திய தலைவர்களையும், அவர்களுக்கு உதவுபவர்களையும், கோத்தாபய ராஜபக்சவைபோல் நாட்டில் இருந்து வெளியேற்றுவோம்" - என்றார். (ச-44)

# பாதாளக்குழுவினருக்கு வெளிநாட்டில் வலை!

கொழும்பு, டிசெ. 28

வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்களை கைது செய்து இலங்கைக்கு கொண்டு வருவதற்கான விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று பொது பாதுகாப்பு அமைச்சர் டிலான் அலஸ் தெரிவித்துள்ளார்.

"டுபாயில் உள்ள பாதாளக் குழு உறுப்பினர்கள் தொடர்பிலும், பிரான்ஸில் உள்ள ஒரு பாதாளக் குழு உறுப்பினர் தொடர்பிலும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன, அவர்களை நாடு கடத்துவதற்கு சம்பந்தப்பட்ட நாடுகளுடன் பேச்சுமுன்னெடுக்கப்பட்டுள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# போதைக்கடத்தல்காரர் சொத்துகள் சுவீகரிப்பு

கொழும்பு, டிசெ. 28

பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து முன்னெடுக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிரான 'யுக்திய' நடவடிக்கையில் கைப்பற்றப்படும் சொத்துகளை அரசாங்கத்துக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பதில் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கென பொலிஸ் சட்டப்பிரிவால் பொலிஸ் சட்டத்தரணிகள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'யுக்திய' நடவடிக்கையின்கீழ் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொத்துகளை கைப்பற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அடையாளம் காணப்பட்டுள்ள 109 பிரதான போதைப்பொருள் கடத்தல்காரர்களின் 100 கோடி ரூபாவுக்கும் மேலான சொத்துகள் முடக்கப்படவுள்ளன என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# நத்தார் விருந்து ஒருவர் கொலை!

கொழும்பு, டிசெ. 28

நத்தார் விருந்தொன்றின் போது இருவருக்கிடையே ஏற்பட்ட தகராறில் ஒருவர் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார் என்று வெலிக்கடைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வெலிக்கடை, வல்பொல, விஜித புர பிரதேசத்தில் நத்தார் தினத்தன்று இடம்பெற்றுள்ளது. (ச-இ)

# மருந்துகளை விடுவிக்க ஒருங்கிணைப்புக் குழு!

கொழும்பு, டிசெ. 28

இறக்குமதி செய்யப்படும் மருந்துகளை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்காக விசேட ஒருங்கிணைப்புக் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மருந்து வழங்கல் பணிப்பாளர் தலைமையில் குறித்த குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# கோப்பாயில் அதிகரிக்கும் குற்றச்செயல்

யாழ்ப்பாணம், டிசெ. 28

அண்மைக் காலமாக கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ள நிலையில், குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸாரின் நடவடிக்கைகளும்தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தை அண்டிய வீதியில் கோப்பாய்ப் பொலிஸார் திடீர் வீதிச் சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் வழிப்பறிக் கொள்ளை இடம்பெறுவதாகப்பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அதனைத் தடுக்கும் வகையில் பொலிஸார் இவ்வாறு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ம-66)

# மீண்டும் 'யுக்திய' வேட்டை

கொழும்பு, டிசெ. 28

போதைப்பொருள் கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்காக முன்னெடுக்கப்படும் 'யுக்திய' சுற்றிவளைப்பு நேற்றுமுதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு நாடுதழுவிய ரீதியில் 'யுக்திய' சுற்றிவளைப்புகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# நல்லையம்பதியில் திருவாதிரை உற்சவம்

யாழ்ப்பாணம், டிசெ. 28

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 10ஆவது நாள் திருவெம்பாவை உற்சவத்தின் இறுதிநாளின் திருவாதிரை உற்சவம் நேற்று புதன்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

விஷேட அபிஷேக, ஆராதனைகள் இடம்பெற்று உள்வீதி மற்றும் வெளிவீதியூடாக எம்பெருமான் மயில் வாகனத்தில் சமேதராக வலம்வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ச-27)

# தானியங்கள் விலை சந்தையில் உயர்வு!

யாழ்ப்பாணம், டிசெ. 28

சந்தையில் தானியங்களின் விலை மீண்டும் உயர்வடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

தானியங்களின் தேவைக்கேற்ப போதுமான கேள்வி கிடைக்காததால் எள், பாசிப்பயறு, கௌபி, உளுந்து போன்றவற்றின் விலை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. ஒரு கிலோ எள்ளின் விலை 950 ரூபாவாகவும், ஒரு கிலோ கௌபி 800 ரூபாவாகவும்பாசிப்பயறு கிலோ 700 முதல் 750 வரை உயர்ந்துள்ளன என்று சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)





படங்கள்: ஐ.சிவசாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலை அனுமதி அரசியல் தலையீடு!

## அவைத்தலைவர் ஆதங்கம்

**யாழ்ப்பாணம், டிசெ. 28**

**பொதுமக்களின் கடும் எதிர்ப்பை மீறி உடுப்பிட்டி இமையாணன் மேற்குப் பகுதியில் மதுபானசாலை அமைக்கப்பட்டுள்ள நிலையில், அந்த விடயத்தில் அரசியல் சம்பந்தப்பட்டுள்ளது.அதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கவிரும்பவில்லை என்று வடமாகாண அவைத்தலைவர் சிவஞானம் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் மதுப் பாவனை அதிகரித்துள்ளது எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. புதிதாக மதுபானசாலைகள் அமைக்கப்படக் கூடாது என்பது எனது நிலைப்பாடு. யாழ். மாவட்டத்தில் மேலதிகமாக மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் வழங்கக் கூடாதென ஏற்கனவே யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற கூட்டமொன்றில் முன்மொழிந்தேன். ஆனால் அது தீர்மானமாக எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-66)

# சுகாதாரச் சீர்கேட்டால் டெங்கு ஆபத்து

## துன்னாலை மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், டிசெ. 28



வடமராட்சி உள்ளிட்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குப் பரம்பலானது உயிரிழப்புகளை ஏற்படுத்தி வரும்நிலையில், துன்னாலைப் பகுதியொன்றில் கழிவுகள் கொட்டப்பட்டு பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
பருத்தித்துறை பிரதேசசபைக்குட்பட்ட துன்னாலை, கியான்காடு இந்துமயானத்துக்கு அருகாமையிலேயே கழிவுகள் கொட்டப்படுகின்றன. தற்போது பெய்த மழை காரணமாக குப்பைகளுக்கு மத்தியில் மழைநீர் தேங்கி துர்நாற்றம் வீசி சுகாதாரச் சீர்கேடும், டெங்கு நுளம்பு பெருகும் அபாயமும் ஏற்பட்டுள்ளன. உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-100)

# சுகாதாரக் குறைபாடுகள் விரைவில் திருத்துங்கள்

வவுனியா, டிசெ. 28

சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கி வரும் உணவகங்களை சீரமைப்பதற்கும் அறிவுறுத்தல்கள் மற்றும் கால அவகாசங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைப்பின்பற்றத் தவறும் உணவகங்களுக்கு எதிராக எதிர்வரும் நாள்களில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (ஒ-இ)

# புத்தாண்டை முன்னிட்டு போக்குவரத்துச் சோதனை

வவுனியா, டிசெ. 28

புத்தாண்டை முன்னிட்டு வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற சோதனை நடவடிக்கையில் வீதி விதி முறைகளை மீறிய 10 சாரதிகளுக்கு எதிராக தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், சாரதி ஒருவருக்கெதிராக வழக்குப் பதிவும் செய்யப் பட்டது. (ச-110)



# சிவத்தமிழ்ச்செல்வி அறக்கொடைவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 28

அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் 99ஆவது பிறந்தநாள் அறக்கொடைவிழா எதிர்வரும் 7ஆம் திகதி காலை 9 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் கலந்துகொள்ளவுள்ளார்.

இதன்போது ஐந்து பெருந்தகைகள் சிவத்தமிழ் விருது வழங்கி மதிப்பளிக்கப்படவுள்ளனர். பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, மருத்துவர் ச. சி.அருளானந்தம், இளைப்பாறிய விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், நாதஸ்வர வித்துவான் இ.கேதீஸ்வரன், இளைப்பாறிய அதிபர் மு.அருணாசலம் ஆகியோரே விருதுகளைப் பெறவுள்ளனர். (ச-9)



யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோயிலில் தேர்த்திருவிழா நேற்று புதன்கிழமை பெருமளவு அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக இடம் பெற்றது. படம்: ஐ.சிவசாந்தன் (ச)

# புதினம் தெரியுமோ?

கூற்றம் பொறுக்காதவள் வற்றாப்பளையாள் எண்டு அங்கத்தைச் சனம் அடிக்கடி சொல்லும். வற்றாப்பளை அம்மன் எந்தளவுக்கு அருள் வழங்கிறாவோ அந்தளவுக்கு கோபமும் உள்ள புதுமையான கடவுள் எண்டது எல்லாரின்ரயும் நம்பிக்கை. அப்பிடிப்பட்ட, அற்புதங்கள் செய்யிற வற்றாப்பளை அம்மன் கோயில்ல , ஒரு நிர்வாகப் பிரச்சினையால இப்ப மாறி மாறி சடுகுடு ஆட்டம் நடக்குது. அதில ஒண்டுதான் 'சிசிரிவி கமெரா' பொக்ஸ்'க்குள்ள இருந்த பாம்பு கொத்தின செய்தி.

கோயில் கதவை உடைச்சு உண்டியலைக் களவெடுக்கப் போனவைக்குதான் 'சிசிரிவி கமெரா' பெட்டிக்குள்ள இருந்த பாம்பு கொத்திப் போட்டுதெண்டுதான் முதல்ல செய்தி வந்தது. ஆனால் உண்மை அதில்லையாம். கோயில் நிர்வாகத்துக்குள்ள கனகாலமாப் பிரச்சினை. ஒரே ஆக்கள் தொடர்ச்சியா இருக்கினமெண்டும், கணக்கு வழக்கு காட்டேலை எண்டும் இன்னொரு தரப்பால வழக்கெல்லாம் போடுப்பட்டு, அதுக்குப் பிறகு இந்த வருசம் ஒக்ரோபர் மாசம் தான் எலக்சன் வைச்சு புது நிர்வாகத்தை தெரிவு செய்தவை. ஆனால்சிக்கல்என்னெண்டால், இந்தப்புதுநிர்வாகத்திலையும் ரண்டு போட்டிக்குழுவைச் சேர்ந்த ஆக்கள் சரிசமமா இருக்கிறதால இன்னும் உள்ளுக்க புகைச்சல் தொடர்ந்தபடிதான் இருக்கு. இந்தநிலையில கோயில்ல இருக்கிற 17 சிசிரிவி கமெராக்களில 4 தான் ஒழுங்கா வேலை செய்யுது. அதால தனக்குத் தெரிஞ்ச ஒருத்தரைக் கூட்டிக்கொண்டு அதுகளைத் திருத்த வெண்டு, இப்பத்த செயலாளர் காரில மைம்மல் பொழுதில போயிருக்கிறார். அங்கயிருந்த மனேச்சரைக் கொண்டுதான் கோயிலைத் திறந்து, கமெராக்களைப் பார்த்திருக்கினம். எல்லாக் கமெராக்களுக்கும் கட்டளைப்பீடம் மாதிரி இருக்கிற 'ரி.டி.ஆர்' எண்டுற பொக்ஸைப் பிரிச்சுப் பார்த்தாத்தான் என்ன பிழை எண்டு கண்டுபிடிக்கலாம் . அதால அந்த பொக்ஸையும் திறக்க, அதுக்க இருந்த பாம்பு . திருத்த வந்தவரைக் கடிச்சுப் போட்டுது. உடனேயே அவரைக் காரில ஏத்திக் கொண்டு போட்டினம். இப்ப அவர் சுகமாகி, ஆஸ்பத்திரியாலையும் திரும்பி வந்திட்டார்.

ஆனால் "எங்களுக்குச் சொல்லாமல் எப்பிடி கமெராவைத் திருத்தலாம்? கமெரா திருத்துறதெண்டா ஏன் இரவில போனவை?" எண்டெல்லாம் யோசிச்ச எதிரணி, பொலிஸில "அனுமதி இல்லாமல் கோயிலுக்க புகுந்திட்டினம்" எண்டு முறைப்பாடு செய்திருக்கினம். எந்த மனேச்சர் திறப்பைக் குடுத்து, கதவைத் திறந்து, கமெராவைத் திருத்த அனுமதிச்சாரோ அதே மனேச்சர்தான் . தலைவரின்ர சொற்படி இப்பிடியொரு முறைப்பாட்டைச் செய்ததுதான் ஆகப்பெரிய பகிடி. அவர் திறப்பைக் குடுக்காமல் இருந்தாலோ, இல்லாட்டி அவரிட்ட இருந்து திறப்பைப் பறிச்சு உள்ளுக்க போயிருந்தாலோ தான் பிரச்சினை. ஆனால் அவரே கதவையும் திறந்துவிட்டு, அவரே "அனுமதி இல்லாமல் புகுந்திட்டினம்" எண்டு முறைப்பாடும் செய்தது கடும் விநோதம்தான். எதிரணிக்காரர் அதோட நிக்கேலை. இந்த முறைப்பாட்டை வைச்சுக் கொண்டு "களவெடுக்கப் போனவையை கண்ணகி அம்மன் பாம்பா வந்து கொத்திப் போட்டா" எண்டு செய்தியையும் எல்லா இடமும் பரப்பிப் போட்டினம். இனியும் வாயை மூடிக்கொண்டிருந்தால் சிக்கல் எண்டிட்டு, பாம்பால கொத்துப்பட்டவர் மீடியாக்களைக் கூப்பிட்டு நடந்த உண்மையை வெளியில சொன்னார். இல்லாட்டி முதல் பரவின பொய்ச்செய்தியைத்தான் எல்லாரும் நம்பிக்கொண்டு இருந்திருப்பினம். என்னதான் நிர்வாகப் பிரச்சினை இருந்தாலும், தங்கட எதிர்த்தரப்புக்கு கள்ளப்பட்டம் கட்டுறது வற்றாப்பளைக் கண்ணகிக்குக் கூடப் பொறுக்காது கண்டியளோ.

-பட்சி


padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



**வாக்கியப் பஞ்சாங்கப்படி சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி (இன்று) மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். 20.12.2023 முதல் 6.3.2026 வரை கும்பராசியில் சஞ்சரிக்கவுள்ளார்.**



## விலகியது ஏழரை

*கொண்ட இலக்கில் இருந்து விலகாமல் கொள்கையோடு போராடி வெல்லும் தன்மை கொண்ட தனுசு ராசி அன்பர்களே...*

கடந்த எட்டரை ஆண்டுகளாக உங்களைப் பாடாய்ப்படுத்திய சனிபகவான் தற்போது உங்கள் ராசிக்கு மூன்றாம் இடத்துக்கு நகர்ந்து உங்களுக்கு மிகப்பெரிய விடுதலையைக் கொடுக்கப்போகிறார்.

சனிபகவான் 3,6,11 ஆகிய வீடுகளில் சஞ்சாரிக்கும்போது நற்பலன்களையே கொடுப்பார். அந்தவகையில் தற்போது சனிபகவான் உங்களுக்கு மூன்றாம் வீடான கும்பத்தில் அடியெடுத்து வைக்கிறார். இதுவரை இருந்த பல பிரச்சினைகளும் தீர்ப்போகின்றன. இனி தொட்டதெல்லாம் துலங்கும். தாழ்வுமனப்பான்மை முற்றிலும் நீங்கித் தன்னம்பிக்கையுடன் செயற்படத் தொடங்குவீர்கள். இழந்த செல்வம், செல்வாக்கை மீட்பீர்கள்.

நோய்கள் தீரும். மருத்துவச் செலவுகள் இல்லாமல் போகும். மனம் ஆரோக்கியமாகும். குடும்பத்தில் இருந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். சமூகத்தில் மரியாதை கௌரவம் கிடைக்கும்.

சனிபகவான் உங்களின் 5, 9, 12 ஆகிய வீடுகளைப் பார்க்கிறார். இதனால் பூர்விக சொத்து சம்பந்தமான விடயங்களில் நல்ல பதில் கிடைக்கும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவீர்கள். சமூகத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். ஆரோக்கியமான விவாதங்கள் வரும். சொத்து விவகாரங்களில் கூடுதல் கவனம் தேவை. அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும்.

**வியாபாரம்:** இதுவரை போட்டியாளர்களால் வியாபாரத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்ட நீங்கள் இனி முன் வரிசையில் இடம்பிடிப்பீர்கள். இலாபம் இரட்டிப்பாகும். தொழிலை நவீனமாக்குவீர்கள். வளைந்து கொடுத்துப் போவது நல்லது. கெடுபிடிகள் குறையும்.

**உத்தியோகம்:** எப்போதும் உங்களை மட்டம் தட்டிக்கொண்டிருந்த மேலதிகாரி மாற்றப்படுவார். தடைப்பட்ட பதவி உயர்வு தேடிவரும். சக ஊழியர்கள் உங்களை மதிப்பார்கள். எதிர்பாராத அளவு வருமானமும் அதன் மூலம் கிடைக்கும்.

**மொத்தத்தில் இந்த சனிப்பெயர்ச்சி உங்கள் வாழ்க்கையில் நிம்மதியையும் சந்தோஷத்தையும் பெரும் யோகத்தையும் கொண்டு வந்து கொட்டி ஆடம்பரமான வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும்.**

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படும் நாள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்பம் தொடர்பான விடயத்தில் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** அலைச்சல், பதற்றம் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். விலையுயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். உதவிகள் கிடைக்கும். புது வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்துகொள்ளாதீர்.

**மிதுனம்:** வேலைச்சுமை நீங்கும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவைப்படும் நாள். லாபம் அதிகரித்தாலும், பணியாளர்களால் வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் போட்டிகளைத் தாண்டி ஓரளவு லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**சிம்மம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். அந்தஸ்து உயரும். திடீர் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். லாபம் பெருகும் நாள்.

**கன்னி:** அனுபவபூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயற்படுவார்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.சாதிக்கும் நாள்.நண்பர்களிடம் கேட்டிருந்த பண உதவி கிடைக்கும்.

**துலாம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். போட்டிகள் குறையும். புதிய மாற்றம் ஏற்படும் நாள். கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

**விருச்சிகம்:** மற்றவர்களை நம்பி முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டாம். தர்ம சங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்குவீர்கள். உடல்நலம் பாதிக்கும். உறவினர்களால் பகை உண்டாகும்.

**தனுசு:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வீடு களைகட்டும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**கும்பம்:** உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். கனவு நனவாகும் நாள். சிலருக்கு செரிமானப் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். ஆரோக்கியம் மேம்படும்.


**மீனம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். கருத்து மோதல்கள் வந்து செல்லும். நட்பு வட்டம் விரியும். பயணங்களால் பயனடைவீர்கள். சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள்.

# கிருபாகரனுக்கு சேவை பாராட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 28

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் த.கிருபாகரனுக்கான சேவைநலன் பாராட்டு நாளை வெள்ளிக்கிழமை தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த மூன்றரை ஆண்டுகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் நாலரை ஆண்டுகள் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி எதிர்வரும் சனிக்கிழமை த.கிருபாகரன் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-159)



# கிளிநொச்சியில் பரவலாக டெங்கு ஏதுநிலைகள்!

கிளிநொச்சி, டிசெ. 28

கிளிநொச்சியில் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக டெங்குக்கு ஏதுநிலை ஏற்பட்டுள்ளது என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல இடங்களில் வெள்ளம் வடிந்தோடக்கூடிய உரிய கட்டமைப்பு இல்லாமையால் நீண்ட நாள்களாக வெள்ளம் தேங்கியுள்ளது. இதனால் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய அபாயம்மிக்க பகுதிகளாக அந்தப் பகுதிகள் மாற்றம் பெற்றுள்ளன.

எனவே அதிகாரிகள் இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-113)

# சுற்றிவளைப்பில் 70 பேர் கைது

மன்னார், டிசெ. 28

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' திடீர் சுற்றிவளைப்பில் மன்னார் மாவட்டத்தில் 70 நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வர்ணமிழக்கும் வானவில்!

'ஆபிரிக்காவின் நீதிபதி' என்று அறியப்படும் பேராயர் டெஸ்மன்ட் டுட்டுவின் இரண்டாவது ஆண்டு நினைவுநாள் தென்னாபிரிக்கத் தலைநகர் கேப்டவுனில் நேற்றுமுன்தினம் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப் பட்டிருக்கின்றது. தென்னாபிரிக்க நிறவெறிக் கட்ட மைப்புக்கு எதிராக - கறுப்பின அடக்குமுறைக்கு எதிராக- முற்போக்குச் சிந்தனையோடு போராடிய விடுதலைப் போராளிகளான டுட்டு போன்றோரின் நினைவலைகளை கலங்கிய கண்களுடன் எண்ணிப்பார்க்கும் இதே தென்னா பிரிக்காதான், மறுமுனையில் காணாமலாக்கப்பட்டோர் விடயத்தை மழுங்கடிக்கச் செய்வதற்காக கொழும்பு தற்போது மேற்கொண்டுவரும் கபடநாடகமான 'உண் மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் தோற்றத்துக்கும் அதன் அடுத்த கட்டச் செயற்பாட்டுக்கும்' தளமொன்றை அமைத்துக்கொடுத்திருக்கின்றது. அத்துடன் இந்த ஆணைக்குழுவுக்கான ஆலோசனைகள் பின்னணிகள் மற்றும் பூர்வாங்கச் செயற்பாடுகளுக்கான ஒத்துழைப்புகள் என்பவற்றை வழங்கி தமிழர்கள் ஏமாற்றப்படவும் காரணமாகியிருக்கின்றது.

இறுதிப் போரின்போதும் அதற்கு முன்னதாகவும் பல்லாயிரம் தமிழர்கள் தாயகத்தில் காணாமலாக்கப் பட்டனர். போர் என்று முடிவுக்கு வந்ததோ அன்றுமுதல் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பதை வெளிப்படுத்தக்கோரி அவர்களின் உறவுகள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வரு கின்றனர். ஆனால் அவர்களின் குரல்கள் கொழும்பின் இரும்பு இதயத்தை எள்ளளவும் அசைக்கவில்லை. மாறாக காணாமலாக்கப்பட்டோருக்கான போராட்டங்களை அவர்களுக்கான ஆதரவுத்தளத்தை மழுங்கடிப்புச் செய்வதற்கே இலங்கை அரசாங்கம் பலமுனைகளிலும் கங்கணம்கட்டி நின்றது - நிற்கின்றது. இந்த இருட்டடிப்பு மனோநிலையின் இறுதி ஆயுதம்தான் காணாமலாக்கப் பட்டோர் விவகாரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் 'உண் மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு'. தென்னா பிரிக்காவில் கறுப்பின அடக்குமுறைகளில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு 'உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை' அமைத்தே தென்னாபிரிக்கா நீதி வழங்கியது. தென்னாபிரிக்கா இன்று பல்லின பல்சமூகக் கட்டமைப்பை உறுதிப்படுத்தி மண்டேலாவின் கனவான 'வானவில் தேசமாக' மிளிர்கின்றதென்றால், அதில் 'உண் மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு' ஏற்படுத் திய தாக்கம் மிகக் கனதியானது. இதனால், 'உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு' என்ற பெயருக்கு இன்று சர்வதேசப் பெறுமதியிருக்கின்றது. இலங்கை இந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தமையின் பின்புலமும் சூட்சுமமும் இதுதான். 'தென்னாபிரிக்காவைப் பின்பற்றி அமைக்கப்படும் ஆணைக்குழு' என்ற விம்பமே இலங்கையை பல்வேறுபட்ட சர்வதேசப் பொறிகளில் இருந்து பத்திரமாக விடுவிக்கும். இது தென்னாபிரிக்காவுக்கும் தெரியும். அப்படியிருந்தும் இந்தக் கபட நாடகத்தில் தென்னாபிரிக்கா ஆற்றும் வகிபங் கானது கலப்பற்ற பச்சைத் துரோகமே.

தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைவர்களும் சரி, பேராயர் டெஸ்மன்ட் டுட்டுவும் சரி, கொழும்பின் கடை கெட்ட அரசியல் கலாசாரத்துக்கு எதிராகக் கடும் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். சர்வதேச மூதவை யின் தலைவராக இருந்தபோது, '2013ஆம் ஆண்டு நவம்பரில் பொதுநலவாய மாநாட்டை சிறிலங்காவில் நடத்தமுடியாது' என குரல் கொடுத்தவர்களில் டெஸ்மன்ட் டுட்டுவும் ஒருவர். 'தமிழ்த்தேசிய நோக்கில் பாதிக்கப் பட்ட ஈழத்தமிழ் மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்ப தைப் பொறுத்தே நான் வழிநடத்தப்பட விரும்புகின் றேன்' என்பதுதான் இலங்கையின் இனப்பிரச்சினையில் அவர் கொண்டிருந்த ஒற்றைநிலைப்பாடு. இப்பேர்ப்பட்ட தலைவர்களை ஈன்றெடுத்த தென்னாபிரிக்கா தான் இன்று கொழும்பின் சதிவலையில் தானும் சிக்கி, 'பாதி க்கப்பட்ட' ஈழத்தமிழர்களையும் சிக்கவைத்திருக் கின்றது. வலியை உணர்ந்த ஒருவர், அதே வலியை இன் னொருவர் அனுபவிப்பதற்குக் காரணமாக இருப்ப தென்பது ஆகப்பெரும் அபத்தம். தென்னாபிரிக்காவின் செய லும் அதுவேதான்.

*அந்தியான சூழ்நிலையில் நடுநிலையாளனாக இருப்பதென்பது ஒடுக்குமுறையாளனின் பக்கம் நிற்பதாகும். யானை எலியின் வாலில் தனது காலை வைத்துக்கொண்டு தான் நடுநிலையாளன் என்று சொல்லுவதை, எலி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை*

– டெஸ்மண்ட் டுட்டு





# விமலை இணைக்கும் எண்ணம் இல்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ. 28**

**விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தர லங்கா சபாயக என்ற அரசியல் கூட்டணியை தமது கூட்டணியுடன் இணைத்துக்கொள் வது தொடர்பில் பேச்சுகள் முன்னெடுக்கப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாள ரான திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பில் தெரி வித்ததாவது:-

கூட்டணியில் இணைத்துக்கொள்ள வேண்டிய தரப்புகள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் கட்சித் தலைமைக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், உத்தர லங்கா சபாகயவுடன் பேச்சு நடத்தப்படவில்ல. கூட்டணி அமைக்கும்போது நாம் விழிப்பாகவே இருப்போம். எது எப்படி இருந்தாலும் தனிநபர்கள் மற்றும் குழுக்கள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் கட்சித் தலைவருக்கே உள்ளது. எமது கொள்கையுடன் இணைந்து பயணிக்க கூடியவர்களே இணைத் துக்கொள்ளப்படுவார்கள்- என்றார். (ம-44)

# நெடுஞ்சாலைகள் வருவாய் உயர்வு

கொழும்பு, டிசெ. 28

நீண்ட விடுமுறையான வாரஇறுதிநாள்க ளில் நெடுஞ்சாலை வருமானம் உயர்ந் துள்ளது. நெடுஞ்சாலைகளில் கடந்த 22ஆம் திகதி 46.4 மில்லியன் ரூபா வருமானமும் 23ஆம் திகதி 50.1 மில்லி யன் ரூபா வருமானமும் ஈட்டப்பட்டுள் ளது. இந்த வருவாய் நெடுஞ்சாலையில் ஒரு நாளில் பெறப்பட்ட அதிக வருவாயாக பதிவாகியுள்ளது. (ச-இ)

# போதைப்பொருள் பதுக்கல் கட்டைக்காட்டில் தேடுதல்!

போதைப்பொருள் இருப்பதாகக் கிடைக் கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து, கட்டைக்காட்டில் பொலிஸாரால் நேற்று முன்தினம் நீண்ட தேடுதல் மேற்கொள் ளப்பட்டது. எனினும் போதைப்பொருள் எதுவும் அங்கு மீட்கப்படவில்லை. அதன் பின்னர் மருதங்கேணி கடற்கரையில் கஞ்சாப் பொதிகள் பொலிஸாரால் மீட்கப் பட்டன. (ம-27)

# குடிசை மக்களுக்கு கொழும்பில் விடிவு!

கொழும்பு, டிசெ. 28

கொழும்பில் குடிசைவீடுகளில் வசிப்பவர்களுக்கு வீடுகளை வழங்கும் அவசர வேலைத்திட்டம் ஆரம் பிக்கப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு வீடுகள் வழங்குவதற்கான புதிய யோசனை வரவு - செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப் பட்டது என்று அதன் செயலாளர் டபிள்யூ.எஸ். சத் யானந்தா குறிப்பிட்டார். (ச-இ)

# இலங்கைக்கு வருகிறார் ஜப்பான் நிதியமைச்சர்

கொழும்பு, டிசெ. 28

ஆசிய நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 4 நாள்கள் சுற்றுப்பயணமாக இலங்கைக்கு வரவுள்ளார் ஜப்பானின் நிதியமைச்சர் சுனிச்சி சுசுகி. அவரது வருகையின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வைச் சந்தித்து, கடன் மறுசீரமைப்புக் குறித்து விவாதிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

## நாளை

29.12.2023

**வெள்ளிக்கிழமை**

**மார்கழி – 13**

சுபநேரம் : 06.28 - 07.58

ராகுகாலம் : 10.58 - 12.28

## நாளொரு நல்வார்த்தை

**மற்றவர்களிடம் அன்பு செலுத்துவதற்கு, நீங்கள் முதலில் உங்களை நேசிக்க வேண்டும்.**

– லியோ பஸ்காக்லியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## புலோலியில் ஆழிப்பேரலை நினைவு



சுனாமி ஆழிப்பேரலை கோரத்தாண்டவத்தின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி புலோலியிலுள்ள சூசையப்பர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் நீத்தவர்களை அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. (ச-100)



ஆழிப்பேரலையில் உயிரிழந்தவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் பிரதான பாலத்தடியில் மன்னார் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் லுஸ்ரின் மோகன்ராஜ் தலைமையில் இடம்பெற்றது. (ச-56)



### திருவாசகவிழா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் வருடாந்த திருவாசகவிழா சொல்லின்செல்வர் இரா.செல்வவடிவேல் தலைவர் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. (ரி-66)

## மருத்துவத் தவறுகள் களைய நடவடிக்கை

டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 28

மருத்துவத் தவறுகளால் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும். மருத்துவத் தவறுகள் காணப்பட்டால் அவற்றை உடனடியாகக் களைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், யாழ்.போதனா மருத்துவமனையில் அண்மைக் காலமாக மருத்துவத் தவறுகளால் உயிரிழப்புகள் நேர்கின்றன என எழுப்பப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில், அமைச்சரிடம் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி வருகைதரும்போது, யாழ். போதனா மருத்துவமனையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் நேரில் தெரிவித்து, அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ச-20)

## உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை 50 வீத மானியத்தைத் தாருங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 28

**வடக்கில் அடுத்த பருவ காலத்தில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையை சுமார் 150 ஹக்ரேயரில் மேற்கொள்வதற்கு 50 வீத மானியத்தைப் பெற்றுத்தருமாறு யாழ். மாவட்ட கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.**

இந்த ஆண்டு நவீன மயப்படுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வடக்கு விவசாயிகளுக்காக எடுத்துவரப்பட்ட 21 ஆயிரம் கிலோ உருளைக்கிழங்கு பயன்படுத்த முடியாத நிலை தொடர்பாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் குறித்த விடயம் தொடர்பாக அறிக்கை கோரியுள்ளதாகவும், எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் நடைபெறாது எனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி-27)

## பேருந்துகளை காணாத கிராமங்கள்

முல்லைத்தீவு, டிசெ. 28

துணுக்காய்ப் பிரதேச செயலாளர் பிரிவு கிராமங்களுக்கு துணுக்காயிலிருந்து பேருந்துகள் இயங்குவதற்கான வழிகளை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மேற்கொள்ளவேண்டும் என போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மீள்குடியேற்றம் இடம்பெற்ற ஆரம்ப காலங்களில் மல்லாவியிலிருந்து இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பேருந்துகள் பணியில் ஈடுபட்டன. ஒரு வருடத்திலேயே சகல பேருந்துச் சேவைகளும் இடை நிறுத்தப்பட்டன. இது தொடர்பாக துணுக்காய்ப் பிரதேச செயலகம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் ஆகியவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் பல தடவைகள் ஆராயப்பட்ட போதிலும் பேருந்துச் சேவைகள் நடைபெறவில்லை. (ஓ-13)

## சேவைநலன் பாராட்டு இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 28

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கடந்த எட்டரை ஆண்டுகளாகக் கோட்டக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் வ. நடராசாவுக்கு சேவைநலன் பாராட்டு நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. (ச-159)



### மார்கழிப் பெருவிழா


யாழ்ப்பாணம், டிசெ. 28

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடத்தும் மார்கழிப் பெருவிழா யாழ். பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறைத் தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் தலைமையில் யாழ். நீராவியடியில் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் கடந்ததிங்கட்கிழமை காலை, மாலை அமர்வுகளாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தென்னாடு செந்தமிழ் ஆகமசிவமடத்தின் முதல்வர் குணரத்தினம் பார்த்தீபன் தொடக்கவுரையையும், யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் அருளுரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா வாழ்த்துரையையும் ஆற்றினர்.

நிகழ்வில் தமிழ்நாடு அறப்பணி அறக்கட்டளையின் தலைவர் ஞானாசிரியர் பவனி அ.தியாகராஜன் சிறப்புரை நிகழ்த்தினார். அத்துடன் நயினை பத்மநாதன் சிவமைந்தன் குழுவினரின் திருமுறை விண்ணப்பம் நிகழ்வும் நடைபெற்றன. (ரி-66)

### வீடு கையளிப்பு!



யாழ்ப்பாணம், டிசெ. 28

அல்வாய் மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நம்பியபுரம் பகுதியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு கனடா வாழ் புலம்பெயர் தமிழரின் நிதிப் பங்களிப்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு பருத்தித்துறை அல்வாய் பிரதேசத்தில் கையளிக்கப்பட்டது. (ரி-100)

## முல்லை நகரத்தில் கடல் உணவு இல்லை

முல்லைத்தீவு, டிசெ. 28

முல்லைத்தீவுக் கடலில் பிடிக்கப்படும் கடல் உணவுகள் முல்லைத்தீவு நகர சந்தைக்கு வருவதில்லை என பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

கள்ளப்பாடு, தீர்த்தக்கரை, சிலாவத்தையிலிருந்து கூடுதலான கடல் உணவு வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் இதன் காரணமாக முல்லைத்தீவு நகரத்தில் கடல் உணவுகளைப் பெற்றுக் கொள்ளமுடியவில்லை என மக்கள் கூறுகின்றனர். (ஓ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 28 • 02 • 1928

மறைவு 29 • 11 • 2023



கடந்த (29.11.2023) புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

**அமரர் திருமதி**

### இராஜதுரை சிவக்கொழுந்து

**திதி: கார்த்திகை தேய்பிறை திருதியை**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (29.12.2023) வெள்ளிக்கிழமை இல.23, சங்கரப்பிள்ளை வீதி மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**இல.23, சங்கரப்பிள்ளை வீதி,**
**மானிப்பாய்.**

**குடும்பத்தினர்**

(cs.53289) (N-1)

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 • 11 • 1954

இறப்பு 26 • 12 • 2023



### பொன்னையா பத்மராசா (மனோகரன்)

சிறுவிளானை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பத்மராசா (மனோகரன்) அவர்கள் கடந்த (26.12.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா சுவானபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், திருச்செல்வம், காலஞ்சென்றவர்களான இராசநாயகம், சுவாம்பிள்ளை மற்றும் மரியராஜா (கனடா) மகேந்திரா, செல்வராணி, ரஞ்சினி (கனடா), ராஜினி, அன்ரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பற்றிமா நாயகி, காலஞ்சென்ற அமிர்தநாயகி, ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), மனோன்மணி (கனடா), லெற்றிசியா, காலஞ்சென்ற மரியராயா, சிவஞானசுந்தரம் (கனடா), சாந்தகுமார், அன்ரன் மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.12.2023) வெள்ளிக்கிழமை காலை 9.45 மணிக்கு பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து அவ்வாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**076 917 5326**
**077 114 9025**

**தகவல்:**
**சகோதரர்கள்.**

(CS 53308) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 • 11 • 1934

மறைவு 27 • 12 • 2023



### திருமதி கந்தசாமி ஜெயமணி

யாழ்ப்பாணம் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி ஜெயமணி நேற்று (27.12.2023) புதன்கிழமை அதிகாலை இறைவடின சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இராசையா கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மராஜா, சற்குணமணி, தவராஜா மற்றும் சரஸ்வதி, விக்னராஜா, செல்வராஜா, கிருஷ்ணதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுகந்தன், ரஜினி, மகிந்தன், ரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமலிங்கம், மேகலா, ஸ்ரீகௌரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற லதீசன், தர்சிகன், ஆரணி, பிருந்தினி, ஸோபியா, லக்ஷன், அபராஜிதன், சாமந்தி, பானுஜன், சுதர்சன், சரண்யன், மேகலாதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சர்வின், அஸ்வின், சிலால்கன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2023) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஞான வைரவர் கோயிலடி,**
**உரும்பிராய் தெற்கு,**
**உரும்பிராய்.**


**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 114 4279**

(cc , 27481) N-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 • 07 • 1950

இறப்பு 26 • 12 • 2023



### சின்னத்துரை ஞானச்செல்வம்

பலாலியைப் பிறப்பிடமாகவும் இல.130, மவுண் கார்மேல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஞானச்செல்வம் நேற்றுமுன்தினம் (26.12.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை இராசம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான மோசஸ் பாக்கியம் தம்பதியரின் மருமகனும், நிர்மலாவின் பாசமிகு கணவரும், சுலக்ஷன், றொஜிஸ்ரன், றகேல்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கொலன், தர்சினி, நிசாந்தினி ஆகியோரின் மாமனாரும், றிஸ்வின், சப்றீனா, றெயான்ஸ், அத்விக் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான தவஞானம், பிரான்சிஸ்கா மற்றும் தேவதிரவியம், மனோான், றோசலீன், யோசேப்பின், பற்றிமா, பிலிக்ஸ்ரவி ஆகியோரின் சகோதரனும், வசந்தியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (29.12.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cr , 53262) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி தெரிவித்தல்



கடந்த 12.12.2023 அன்று காலமான
எமது குடும்பத்தலைவி
திருமதி

**பஞ்சாபகேசசர்மா இந்திராட்சி**

அவர்களின் துயரச்செய்தியை அறிந்து உடனே வந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், ஊர்மக்கள் மற்றும் நேரில் வருகை தந்து ஆறுதல் கூறியவர்கள், தொலைபேசி மூலமும், கடிதம் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியவர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.


மேலும் அவர் சுகவீனம் அடைந்தபொழுது நொதர்ண் வைத்தியசாலையில் **(Northern Hospital)** அனு மதிக்கப்பட்ட காலத்தில் அவருக்கு சிகிச்சை அளித்த வைத்திய நிபுணர் களுக்கும், தாதியர்களுக்கும் மற்றும் உத்தியோ கத்தர்களுக்கும், சக ஊழியர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**சிவன்கோயிலடி,**
**ஆவரங்கால், புத்தூர்.**

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 11 . 1931



மறைவு 25 . 12 . 2023

## தில்லையம்பலம் தியாகராசா

பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் தியாகராசா கடந்த (25.12.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் நாகம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், துரைராசா, சண்முகலிங்கம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், சசிகலா, சுபத்திரா (ஓய்வுபெற்ற நூலகர்), சுதர்சன் (ஜேர்மனி), சுமதி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்வானந்தம் (ஓய்வுபெற்ற நில அளவை உதவி யாளர்), மகேஸ்வரன் (நூலக உதவியாளர்), பத்மாவதி (ஜேர்மனி), செல்வகுமார் (MPCS) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனகன், அபிசன், நர்மதன், அபிநயா, துசானி, தூரிகா, துவாரகன் ஆகியோரின் அன்புப் பேரனும், சுலக்சன், கலக்ஷன், டிவர்சனா ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2023) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**இல.46, நாயன்மார் வீதி,**
**நல்லூர்.**

(cc. 27481) N-1

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலை அதிபராக கடமையாற்றி இன்றைய தினம் (28.12.2023) சாவகச்சேரி கல்வி வலய கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வுபெற்று செல்லும் எமது அதிபர்

**திரு.ஐயாத்துரை தேவஈஸ்வரன்**
**(SLPS - 1 B.Com, HNDA, PGDE)**

அவர்கள் மென்மேலும் பல பதவி உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**பழைய மாணவர் சங்கம்**
**யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்.**

# பணியாளர் தேவை

கொழும்பை தலைமையகமாகக் கொண்ட தனியார் நிறுவனமொன்றின் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள தனது புதிய கிளை நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்** (Marketing Executive) **ஆண்கள்**
**தகைமை:** i. க.பொ.த. உயர்தரச்சித்தி
ii. துறைசார் தகைமையுடன் முன்னனுபவம்.

**எழுதுவினைஞர்** (Clerk)
**தகைமை:**
i. க.பொ.த. உயர்தரச்சித்தி
ii. கணினி அறிவு
iii. கணக்கியல் அறிவு



உங்கள் சுயவிவரக் கோவையை (CV) பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். newjobvace@gmail.com

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

**இம்மாதம் 16 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை**

## இந்தியன் செலக்ஷனின்

## நத்தார் மற்றும் புதுவருட ஜவுளிப் பண்டிகை

**ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்**

பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
சல்வார்கள், சல்வார்
துணிகள், டொப், பாட்டி
புரொக், சேட்,
ரீ சேட், சோட்ஸ் மற்றும்
சிறுவர்களுக்கான
ஆடைகள்



## விஷேட விலைக்கழிவு

ரெடிமேட் சல்வார் 750 /=

டொப் 500/=

**கையிருப்பு உள்ளவரை மட்டுமே**

**காலம்: 16.12.2023 முதல் 31 ஆம் திகதி வரை**
**இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்**
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும்.
இழுத்து பதிக்க ஒரு சதுர அடி 85 ரூபாய்

தொடர்பு : 077 334 1281

# தவறி விட்டது

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து K.K.S வீதி ஊடாக சென்ற பேருந்தில் க.ஜெயக்குமாரின் தேசிய அடையாள அட்டை (இல - 196331102096) பேஸ் ஒன்றுடன் தவறவிடப்பட்டுள்ளது. அதனைக் கண்டு எடுத்தவர்கள் கீழ் காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 052 9401, 075 041 4096
076 591 3406, 076 380 9793

# அதிகளவு மதுப்போத்தல்; ரஷ்யருக்குத் தண்டம்!

அளவுக்கதிகமான மதுப்போத்தல்களை எடுத்து வந்த குற் றத்துக்காக ரஷ்ய உல் லாசப்பயணி ஒருவ ருக்கு 67 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப் பட்டுள்ளது.

ரஷ்ய உல்லாசப்ப யணி ஒருவர் காரில் சென்று எரிபொருள் நிரப்ப முயற்சித்த வேளையில் பொலி ஸார் அவரது காரைச் சோதனையிட்ட போதே இந்தக் குற்றச் செயல் கண்டறியப்பட் டது. காரில் 17 மதுப் போத்தல்கள் மீட்கப்பட்டன. சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தி யமை, அளவுக்கதிக மான மதுப்போத்தல் களை எடுத்துச்சென் றமை ஆகிய குற்றங்க ளுக்காகவே குறித்த உல்லாசப்பயணிக்கு இந்தத் தண்டம் விதிக் கப்பட்டது. (ச-6)

## பாக். தேர்தலில் இந்துமதப் பெண்

பாகிஸ்தானில் எதிர்வ ரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் முதற்தடவையாக சவீரா பிரகாஷ் என்ற இந்து பெண்மணி யொருவர் களமிறங் குகிறார்.


பாகிஸ்தான் மக்கள் கட்சியில் கடந்த 35 வருடங்களாக சேவை யாற்றிய மருத்துவர் ஓம் பிரகாஷின் புதல் வியான சவீரா ஒரு மருத்துவராவார். 2022 ஆம் ஆண்டு மருத்துவப் பட்டப்ப டிப்பை முடித்து கட்சி யின் மகளிர் அணி செயலாளராகவும் செயற்படுகிறார்.

அரச மருத்துவமனை களில் சிகிச்சை பெறும் வறிய மக்க ளுக்கு உதவுவதே எனது முதல் இலக்கு என்று சவீரா தெரிவித் துள்ளார். (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 05 . 1941



மறைவு 27 . 12 . 2023

### நாகலிங்கம் கதிர்காமதாஸ்

ஈபோ மலேசியாவைப் பிறப்பிடமாகவும், முத்துகிருஷ்ணர் வீதி, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கதிர்காமதாஸ் அவர்கள் நேற்று (27.12.2023) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் செல்லம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நாகம்மா தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சத்தியபாமாவின் அருமைமிகு சகோதரனும், பாரதி (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்), ஹரன் (அவுஸ்திரேலியா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவனாவின் (அவுஸ்திரேலியா) பாசமிகு மாமனாரும், பாலகிருஸ்ணன் (ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர்), பேராசிரியர் தில்லைநாதன், இராமநாதன் (ஓய்வுபெற்ற நீரியல் அளவையாளர்) ஆகியோரின் மைத்துனரும், வித்தகன், கிருசிகன், பார்க்கவி, தனீஷா, சஹேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2023) வியாழக்கிழமை காலை 08.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் கொத்தியாலடி இந்துமயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**
**077 019 5401**

(CS 27486) S-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### பிரான்சிஸ்பிள்ளை அன்ரனி றெஜினோல்ட்

**(முன்னாள் முகாமையாளர் - ஆசிரி ஆய்வு கூடம்)**

கோப்பாயை பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ்பிள்ளை அன்ரனி றெஜினோல்ட் நேற்று (27.12.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரேஸ் கமலாவின் அன்புக் கணவரும், ஜெனிபர் சரண்யா (Development Officer - Divisonal Secretariat-Jaffna - Delft), றொட்னி பிரசாந்த் (Amana Takaful - Branch Manager) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஜோன் பிரான்சிஸ்பிள்ளை மற்றும் லில்லிமேரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் ஆசீர்வாதம் - ஞானம்மா சிசிலியா தம்பதியரின் அன்பு மருமகனும், பிறிம்றோஸ் (லண்டன்), காலஞ்சென்ற நந்தினி மற்றும் மேரி காமினிற்றா, காலஞ்சென்ற அன்ரனி சில்வெஸ்டர் மற்றும் விறிபிறீடா (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), வினோதினி (Jaffna Traders), காலஞ்சென்ற றஜனி மற்றும் வொஷிங்டன் (லண்டன்), வெலானி ஆகியோரின் பாசமிகு அண்ணனும், அருளானந்தம், அன்ரன், நித்தியானந்தம், தாசன், காலஞ்சென்ற குலேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், லக்ஷனாவின் மாமனாரும், மெர்டித் றிரோஷனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.12.2023) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யா/கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் யா/கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**29/4, புதுவீதி ஒழுங்கை,**
**கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.**

(CS 27452) A-1

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 341 8597**

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 02 . 1938



மறைவு 27 . 12 . 2023

### கந்தையா கனகலிங்கம்

**(கனகலிங்கம் புடைவையகம் - சாவகச்சேரி)**

சாவகச்சேரி மருதடி 1ஆம் கட்டை வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகலிங்கம் அவர்கள் நேற்று (27.12.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், சுதர்சினி, ஹேமலதா, கோபிகா (சுவிஸ்), கிருஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயகுமார் (பிரதேச சபை, கைதடி), ஹதீபன் (லண்டன்), நகுலேஸ்வரன் (சுவிஸ்), கோபிரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், ஜதுரானன், அக்சயன் (சுவிஸ்), அகரன் (சுவிஸ்), ஆதீரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் காசிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை (கனடா) மற்றும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக நண்பகல் 12.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**1ஆம் கட்டை, மருதடி,**
**சாவகச்சேரி.**

(CR 41398) A-1

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 4814 767**

## மரண அறிவித்தல்



### நடராசா பஞ்சலிங்கம் (விஜயன்)

**(கிளை முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம்)**

செம்பியன்பற்று தெற்கு செம்பியன்பற்றை பிறப்பிடமாகவும், இரும்புமதவடி, வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பஞ்சலிங்கம் (விஜயன்) (கிளை முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம்) அவர்கள் நேற்று (27.12.2023) காலமாகிவிட்டார்.

அன்னார் நடராசா சேதுபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், விஜயரட்ணம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், விஜயலக்சுமி அவர்களின் அன்பு கணவரும், காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்), கமலாம்பிகை, வன்னியசிங்கம் (ஜேர்மனி), வதன நிர்மலா, கணேசலிங்கம் (டென்மார்க்) அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (28.12.2023) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனத்திற்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 41396) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
23
.
07
.
1950



மறைவு
27
.
12
.
2023

## திருமதி விமலராணி வேதநாயகம் (லில்லி)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும். கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலராணி வேதநாயகம் அவர்கள் நேற்று (27.12.2023) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான யோசப் கனகமணி தம்பதியரின் பாசமிகு மருமகளும், வேதநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், நிறைஞ்சனி (மகளிர் விவகார அமைச்சு, வடமாகாணம்), பிரதீஸ்குமரன் (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விலிப்வில்பேட் நெல்சன் (சுதேச மருத்துவத் திணைக்களம், வடமாகாணம்), டிலானி நிரோசா (உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் கதிர்காமராஜா, இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மரியநாயகம், ஜெயராஜா, ஜெயராணி, துரைநாயகம், செல்வநாயகம், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, தம்பிராசா மற்றும் விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கெனோஷன், கவிநயா, ஹஷானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (29.12.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டு, பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**32/02, புதுவீதி,**
**கொய்யாத்தோட்டம்,**
**யாழ்ப்பாணம்.**

(CS 27494) S-1

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 659 1651, 077 414 6182**

# மரண அறிவித்தல்

தோற்றம்
15
.
01
.
1942



மறைவு
24
.
12
.
2023

## றீற்றா சவிரிமுத்து (ரெத்தினம்)

**(முன்னாள் தையல்தொழில் பயிற்றுவிப்பாளர் - தொழில் திணைக்களம்)**

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியை பிறப்பிடமாகவும், ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட றீற்றா சவிரிமுத்து அவர்கள் கடந்த 24.12.2023 ஞாயிற்றுக்கிழமை ஹொலண்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து மரியம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பிலோமினா மரியநாயகம் (ருக்மணி), ஜேசுதாசன் றோச் கமலாகரன் (ஹொலண்ட்), மரியதாஸ் மனோகரன், தேவதாசன் மகேந்திரன் (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற மரியநாயகம், அன்புமலர் (ஹொலண்ட்), அன்ரனற் ஜெயசீலி (ஜெயா), ஜோசபின் கூட்ஸ் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அல்றின் ஜெராட் ஜோயின் (ஹொலண்ட்) பாசமிகு சிறியதாயாரும், சுகீவன், கிஷோ அன்ரன், றிச்மன், மதிவதனி மரியா, யூட் டினேஷ், லக்ஷ்மன் மகேந்திரி, ருத்மன், மகிழினி மடோனா, சமந்தா, செபஸ்ரியன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஹொலண்டில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, (30.12.2023) சனிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் St.Dionysius தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மரியதாஸ் மனோகரன் (தம்பி)**
**077 774 1750**
**021 222 6266**

**32/16, அச்சக வீதி,**
**சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**

(CS 27492) S-1

# சுத்திகரிப்பு பணியாளர் தேவை



யாழ்ப்பாணத்தில் இயங்கும்
தனியார் நிறுவனத்திற்கு சுத்திகரிப்பு
பணியாளர் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
நேரில் வரவும்.

**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# மணிவிழா வாழ்த்துக்கள்



## திருமதி
## தயாநிதி கணேசலிங்கம்

**(SLPS-2, BEd)**

பிரதி அதிபர்.
கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை)



எங்கள் ஏக்கங்கள் அறிந்து
எங்கள் ஆசைகளை நிறைவேற்றி
தனக்கென வாழாமல் எமக்கென
வாழும் எங்கள் அம்மாவின்
அகவை அறுபதில் அகமகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.......!
பிறந்தநாள் வாழ்த்துகள் அம்மா.....

Best Wishes

வாழ்த்துவோர்:
**பிள்ளைகள், மருமகள்.**

(CS 27491) A-1

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் (28.12.2023) பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (PGDEM) பட்டம் பெறும் எமது பாடசாலை முதல்வர்



## திரு. துரைராஜசிங்கம் குலதீபன்

**(BA, Dip. in Edu. SLPS - III)**


அவர்களை மனதார பாராட்டுவதோடு
அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று,
வாழ்வில் மகத்தான நிலைய்யை அடைய
வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர் :
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.
**யா/சுப்பிரமணிய வித்தியாசாலை - காரைநகர்**

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19
.
11
.
1964



மறைவு
28
.
12
.
2008

## ஞானப்பிரகாசம் ரவீந்திரன்

**ஆண்டுகள் பதினைந்து கடந்து சென்றாலும்**
**ஆறவில்லை எங்கள் மனம் குடும்பம் என்ற கோயிலில்**
**குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!**
**மாண்டாலும், மறையாது**
**உங்கள் நினைவு என்றென்றும்.**

**நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 27485) S-1

**மனைவி, மகள்கள்,**
**மருமகன்மார், சகோதரர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்பிரச்சினை...

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று பதுளையில் நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;- நாட்டின் அனைத்து மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் அதேவேளையில், நல்லிணக்கம் தொடர்பான தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்க எதிர்பார்த்துள்ளேன். எதிர்வரும் மார்ச் மாதம் அது தொடர்பான விசேட அறிக்கையொன்றை வெளியிடவும் எதிர்பார்க்கின்றேன்.

நாட்டில் இன்று தீர்க்கப்படவேண்டிய இரு பிரதான பிரச்சினைகள் உள்ளன. நாட்டில் நிலையான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது முதல் விடயமாகும். இரண்டாவது விடயம் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகும். ஒரு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல, நாட்டில் நல்ல பொருளாதாரம் மற்றும் மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இலங்கையர் என்ற அடையாளம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சிங்கள மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கு ஏற்கனவே தீர்வுகளை வழங்கியுள்ளோம், ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வழங்கி வருகின்றோம். ஏனைய இனத்தவர்களின் பிரச்சினைகளிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. போர் நிறைவடைந்த போதும், ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் உள்ளன. அரசு என்ற வகையில் அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்தாலும், வலுவான பொருளாதாரம் இல்லை என்றால், மீண்டும் அதே பிரச்சினைகள் தலைதூக்கும். மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, செயற்பட்டு வருகிறோம். அவர்களுக்கு காணி, கல்வி, மேம்பாடு உள்ளிட்ட உரிமைகளை வழங்க விசேட திட்டங்களை செயற்படுத்தியுள்ளோம்-என்றார். (அ-எ 44)

## நேற்று மட்டும்..

தொற்றுடன் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்குத் தொற்றுத் தீவிரமடைந்துள்ள நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை டெங்குத் தொற்றாளர்களால் நிரம்பியுள்ளது.

டெங்குத் தொற்றாளர்களைக் கையாள்வதற்காக இரு விசேட விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. அதேவேளை, குழந்தை நோயாளர் விடுதியும் நோயாளர்களால் நிரம்பியுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (அ-எ-26)

## புலிச்சின்ன

பொறிக்கப்பட்ட ரீ சேர்ட் அணிந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞனுக்கு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று பிணை அனுமதி வழங்கியது.

கடந்த மாவீரர் தினத்தன்று இளைஞர் அணிந்திருந்த ரீசேர்ட் தொடர்பாகவே அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இளைஞன் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன் இளைஞரை விடுவிப்பதற்கு சட்டமா அதிபர்திணைக்களத்தின் அனுமதியை பெறுவதற்கான விண்ணப்பத்தை மன்றில் செய்திருந்தார். இளைஞருக்குப் பிணை வழங்குவதற்கு சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவிக்காததை அடுத்து நேற்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணைகளை அடுத்து நீதிமன்றம் இளைஞருக்குப் பிணை அனுமதி வழங்கியது. (அ-எ-100,66,125)

## யாழ்.நகரப்பகுதியில்...

செல்லப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## கிணற்றில்..

என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கிளிநொச்சி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-113)

## தேவாரம்...

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை நடந்துள்ளது. வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சி.இராசரத்தினம் (வயது-88) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஆலயத்துக்குத் தினமும் சென்று தேவாரம் ஓதும் இவர், நேற்றும் வழமை போன்று ஆலயத்துக்குச் சென்றுள்ளார். ஒலிவாங்கியில் தேவாரம் ஓதிக்கொண்டிருந்தபோது திடீரென அவர் மயங்கிச் சரிந்துள்ளார். உடனடியாக வல்வெட்டித்துறை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். (அ-எ-100)

## பேராசையால்...

இவ்வாறு ஏமாற்றப்பட்ட இருவர் முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். ஒருவர் சுமார் 20 லட்சம் ரூபாவையும், மற்றையவர் சுமார் 6 லட்சம் ரூபாவையும் இழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சமூகவலைத்தளங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் இவ்வாறான மோசடிகள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்த தெரிவித்துள்ளார். (அ-எ-26)

## தீக்காயம்...

உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மல்லாகத்தில் நடந்துள்ளது. சின்னத்துரை செல்வநாயகம் (வயது-75) என்ற முதியவரே உயிரிழந்தார்.

கடந்த 19ஆம் திகதி நுளம்புக்குப் புகையிட்ட முதியவர், புகைச்சட்டியில் நெருப்பை பற்றவைக்க மண்ணெண்ணெய் விசிறியுள்ளார். அப்போது அருகில் இருந்த கதிரை தீப்பற்றி, அவர் தீக்காயங்களுக்கு உள்ளானார். அதையடுத்து அவர் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகள் நேற்று நடைபெற்றன. வலி.வடக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-எ-26)

## முற்றத்தில்...

இந்தச் சம்பவம் பேசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடந்துள்ளது.

சிறுமியின் கழுத்தில் இருந்த ஒன்றே கால் பவுண் தங்கச் சங்கிலியே அபகரிக்கப்பட்டுள்ளது . இது தொடர்பாக பேசாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்ப விசாரணைகளின் அடிப்படையில் சிறுமியின் சங்கிலியைக் கொள்ளையிட்டவர், பேசாலை ஆலயத்துக்குச் சென்று அங்கிருந்த கைபேசிகளையும் களவாடிச் சென்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும், பாதுகாப்புக் கமராப் பதிவுகளின் அடிப்படையில் சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-60)

## யாழில்...

ஆண் குழந்தை ஒன்றும் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-எ-26,66)

## அதிக கஷ்டப்...

முறைப்பாட்டை அவர்கள் வழங்கியுள்ளனர்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள அதிபர்களாகிய தமக்கு புள்ளியிடல் முறைமையின் கீழ் அதிகஷ்ட பிரதேசங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாம் ஆசிரியர்களாக பல ஆண்டுகள் அதிகஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றி வந்துள்ளோம். தற்போது போட்டிப் பரீட்சையில் தோற்றி, அதிபர்களாக நியமனம் பெற்றுள்ளோம். அவ்வாறு நியமனம் பெற்ற எம்மை மீள அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கு அதிபராக நியமித்துள்ளமை மூலம் எமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் அந்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர். (அ-ம-26)

# ஐவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ.28

வல்வெட்டித்துறை பொலிஸாரின் வீட்டில் திருட்டில் ஈடுபட்ட சம்பவத்துடன் தொடர்புபட்டு கைது செய்யப்பட்டிருந்த ஏழு சந்தேகநபர்களில் இரண்டு சந்தேகநபர்களுக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்டதுடன், ஐந்து சந்தேகநபர்களை எதிர்வரும் பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிவான் ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற திருட்டு தொடர்பில் விசாரணை மேற்கொண்ட காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பொலிஸார் ஏழு சந்தேகநபர்களை கைது செய்து பொருள்களை மீட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, ஐந்தாம், ஆறாம் சந்தேகநபர்களை தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதித்ததுடன், ஏனைய ஐந்து பேரையும் எதிர்வரும் பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-100)


## முகாமையாளர் தேவை



கொழும்பை தலைமையகமாகக் கொண்ட தனியார் Company யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள தனது புதிய கிளை நிறுவனத்திற்கு கீழ்காணும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**முகாமையாளர்:**

**தகைமை:**

i. க.பொ.த. உயர்தரச்சித்தி
ii. துறைசார் தகைமையுடன் முன்னனுபவம்.
iii. வயது - 35-50 வரை இருத்தல் வேண்டும்.
iv. ஆண், பெண் இருபாலாரும்.

**உங்கள் சுயவிவரக் கோவையை (CV) பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

newjobvace@gmail.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/ஹிபேக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபரும், சமூக, சமய சேவையாளர்

**திரு. நவரத்தினம் ஜெயகுமாரன்**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக (Justice of the Peace - whole Island) 22/11/2023 அன்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர்:

- திரு. K. சிவஞானசுந்தரம். (முகாமையாளர், திருக்கணித அச்சகம்.)
- திரு. S. சுந்தரலிங்கம் (ஓய்வு நிலை அதிபர், மட்டுவில் AMTMV)
- திரு. K. உதயகுமாரன் (ஓய்வு நிலை அதிபர் கிளி பளை மத்திய கல்லூரி)
- திரு. S.கிருஷ்ணன் ( ஓய்வுநிலை அதிபர், மட்டுவில் வடக்கு GTMS)
- திருமதி. K. சியாமளா (ஓய்வுநிலை அதிபர், இந்து ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி.)
- திரு. R. ரவீந்திரன் (ஓய்வுநிலை அதிபர், கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்)
- திரு. Y. ஜெயகாந்தன் (ஓய்வு நிலை அதிபர், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி )
- திருமதி.T. ஜெயமணி (ஓய்வு நிலை அதிபர், மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்)
- திரு S. பவளேந்திரன் ([illegible] RCTMS)
- திரு. K. எழிலழகன் (அதிபர், மட்டுவில் சந்திர மௌளீசா வித்தியாலயம்)
- திரு. S. சின்னநந்தன் (அதிபர், நாவற்குழி MV)
- திரு. A. தங்கவேலு ( அதிபர் வரணி மத்திய கல்லூரி)
- திரு. K. கஜேந்திரன் (அதிபர், கிளி இயக்கச்சி MV)
- திருமதி T. பாலசுப்பிரமணியம் (அதிபர், சாவகச்சேரி மகளிர் கல்லூரி)
- திருமதி. G. வள்ர்மதி (அதிபர், மிருசுவில் GTMS)
- திரு. T. அபராஜிதன் (அதிபர், போக்கட்டி GTMS)
- திரு. P. நடேசலிங்கம் (அதிபர் எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேசா வித்தியாலயம்)
- திரு. N. தமிழ்ச்செல்வன் (அதிபர், மந்துவில் RCTMS)
- திரு. K. ரவீந்திரன் (அதிபர், போக்கட்டி GTMS)
- திரு. N. வசந்தரூபன் (அதிபர், வரணி வடக்கு GTMS)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அமைதிக்கு அரசியல் தீர்வு அவசியம்!

## நியூஸிலாந்து தூதுவரிடம் வலியுறுத்தினார் சம்பந்தன்

**கொழும்பு, டிசெ.28**

**இலங்கையில் அமைதி ஏற்பட மக்கள் சுதந்திரமாக வாழ அரசியல் தீர்வு கட்டாயம் காணப்படவேண்டும் என்று இலங்கைக்கான நியூஸிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டன் வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கைக்கான நியூஸிலாந்து தூதுவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனை அவரது கொழும்பு இல்லத்தில் நேற்றுச் சந்தித்துப் பேசினார். அந்தச் சந்திப்பிலேயே நியூஸிலாந்து தூதுவர் இவ்வாறு தெரிவித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தச் சந்திப்பில் முக்கியமாக அரசியல் தீர்வு தொடர்பாகப் பேசினோம். இலங்கையில் அமைதியையும், நீதியையும் ஏற்படுத்தும் வகையில் நியாயமான நிலையான அரசியல் தீர்வைக்காண வேண்டும் என்றும், அப்போதுதான் நாடு முன்னேற்றமடையும் என்றும் அவரிடம் நான் கூறினேன்.

சர்வதேச ஒப்பந்தங்கள், சர்வதேச வாக்குறுதிகள் மற்றும் ஐ.நா. தீர்மானங்களை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் அவரிடம் நான் தெரிவித்தேன். தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு- கிழக்கு மாகாணங்கள் மீளிணைக்கப்பட வேண்டும் என்பதையும் அவரிடம் எடுத்துரைத்தேன். இவை தொடர்பில் இலங்கை அரசுக்கு நியூஸிலாந்து உள்ளிட்ட அனைத்து வெளிநாடுகளும் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவரிடம் வலியுறுத்தினேன். எனது கருத்துக்களை நியூஸிலாந்து தூதுவர் ஏற்றுக்கொண்டார். தமது நாட்டில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது என்றும், அதே நிலைமை இலங்கையிலும் ஏற்பட வேண்டும் என தமது நாட்டு அரசு விரும்புகின்றது என்றும் தெரிவித்தார். (எ-26)



### சிறுமி கில்மிஷாவுக்கு பிரமாண்ட வரவேற்பு!

யாழ்ப்பாணம், டிசெ.28

இந்தியாவின் தனியார் தொலைக்காட்சி நடத்தி பாடகிகளுக்கான போட்டியில் முதலிடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த சிறுமி கில்மிஷாவுக்கு இன்று பிரமாண்டமான வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரியாலை ஸ்ரீ கலைவாணி சனசமூக நிலைய மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு வரவேற்பு நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கு யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (எ-66)

## ரணில் போட்டியிடார்

### அசோக அபேசிங்க தெரிவிப்பு!

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்பதை நிச்சயம் கூறுவேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

ரணில் விக்கிரமசிங்க 2010, 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடவில்லை. 2019 ஆம் ஆண்டும் அவ்வாறே நடந்தது. ஆகையால் இந்த முறையும் அவர் போட்டியிடப்போவதில்லை எனவும், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் அமையும் கூட்டணியில் மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலரே உடைந்து வந்து இணைவார்கள் என்றார்.

அவ்வாறு அவர் போட்டியிட்டாலும் 30 இலட்சம் வாக்குகளுக்கு மேல் பெறமாட்டார். சஜித் பிரேமதாஸ 50 இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறுவார் - என்றார். (ரி-44)

## போதையில் சாரத்தியம் கைது நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 28

போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்ய 24 மணிநேர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துகள் ஏற்படுவதால் பொதுமக்களின் பெறுமதியான உயிர்கள் மற்றும் சொத்துகளைப் பாதுகாப்பதை இலக்காகக் கொண்டு குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கைது செய்ய பொலிஸாருக்கு விசேட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் அறிவுறுத்தலின்படி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே பொலிஸார் வாகனத்தை நிறுத்தி சோதனை இடும்போது அவர்களின் சோதனைகளுக்கு ஒத்துழைக்குமாறு பொதுமக்களை பதில் பொலிஸ்மா அதிபர் கேட்டுள்ளார். (ரி-26).


**பணியாளர் தேவை**

தெல்லிப்பழையில் உள்ள வீடொன்றில் தங்கி நின்று வயோதிபத் தாய், தந்தையரை பராமரிப்பதற்கு பணியாளர்கள் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
(ஆண், பெண் இருபாலாரும் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்பு: 077 703 4849



**சிறிராம் ஜுவல்லர்ஸ்**

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடி



* செய்கூலி சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
**ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்கள்.**
* அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

தொடர்புக்கு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334




### இரதோற்சவம்

குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத் தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ரி-66)

## ஜனாதிபதித் தேர்தலுக்குரிய ஆயத்தங்களை முன்னெடுக்க தம்மிக்கவுக்கு ஆலோசனை

கொழும்பு, டிசெ. 28

ஜனாதிபதித்தேர்தலுக்குரிய ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவுக்கு, அமெரிக்காவில் இருந்து பஸில் ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. அமெரிக்கா செல்வதற்கு முன்னரும் தம்மிக்க பெரேராவுடன் பஸில் ராஜபக்ச பேச்சு நடத்தியுள்ளார்.

இதனையடுத்தே கட்சிகளுடனான பேச்சு, வர்த்தக பிரமுகர்களுடனான சந்திப்பு என ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கையில் தம்மிக்க பெரேரா ஈடுபட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது. அதேவேளை, தம்மிக்க பெரேராவுக்கு இந்தியாவின் ஆதரவைப் பெற்றுக்கொடுப்பதற்கான உறுதிமொழியையும் பஸில் ராஜபக்ச வழங்கியுள்ளார் எனக்கூறப்படுகின்றது. (ஒ-44)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 30 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 077 468 3354
071 173 3911




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org